**தலைப்பு 6 – அரசாங்க சேவை ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 6 – அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 20 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 422.64 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 210.62 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 212.02 மில்லியன் அதாவது 50 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 141.54 | 140.15 | 1.39 | 0.98 |
| மூலதன | 281.10 | 70.47 | 210.63 | 74.93 |
| மொத்தம் | 422.64 | 210.62 | 212.02 | 50.17 |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 00601 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 7.50 | 7.50 | 3.74 | 5.18 | 33.00 | 21.21 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

ஆணைக்குழுவின் கீழ் 3 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.85 மில்லியன் ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **பொது வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0002/0081/000 | 0.008 |
| 6000/0000/00/0013/0051/000 | 0.008 |
| 6000/0000/00/0016/0068/000 | 6.835 |
| மொத்தம் | 6.851 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

00601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 14 வருடங்களுக்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 32,320 இடர் கடன் தொகையினை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு ஆணைக்குழு அலுவலகம் தவறியிருந்தது.

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக குழுக்கூட்டம் 02 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**3.3 இணங்காமைகள்**

**3.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனமொன்று தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | |
| | 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனத்திற்காக கிரய அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.4 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டின் போது 370 ஒழுக்காற்று நடவடிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எண்ணிக்கை 385 ஆகும். 181 புதிய ஆட்சேர்ப்பு

நடைமுறைகளில் 96 இனது குறைபாடுகளை சரி செய்வதற்காக தயாரிப்பதற்காக அமைச்சுக்களுக்கு மீண்டும் அனுப்பப்பட்டிருந்ததுடன் 22 இனது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் 118 புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரிக்க முடியாதிருந்தது. 09 புதிய சேவை பிரமாணக் குறிப்பு தயாரித்தலில் 4 இனையும் 8 இட நடைமுறைகளில் 5 இனையும் அங்கீகரிக்க முடியாதிருந்தது. ஆணைக்குழுவின் முறையீட்டுப் பிரிவிக்கு கிடைத்த 2272 முறைப்பாடுகளில் 1451 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 821 இனது நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.